செ.வெ.எண்: 77 நாள்: 26.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் சுகாதாரத்துறையின் மூலம் தமிழகஅரசு செயல்படுத்தும் மக்கள் நலத்திட்டங்கள் பொதுமக்களை சென்றடையும் வகையில் மருத்துவ அலுவலர்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து மாவட்ட அளவிலான ஆய்வுக்கூட்டம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச்செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், தேசிய நலவாழ்வு மைய திட்ட இயக்குநர் டாக்டர்.தாரேஸ்அகமது,இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (26.11.2016) துவக்கி வைத்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி நமது மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்களின் செயல்பாடுகள், பொது சுகாதாரத்துறை மற்றும் தேசிய நலவாழ்வு மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து மக்கள் நலத்திட்டங்களின் மூலம் பயன்பெற்றோர் குறித்தும், இத்திட்டங்களை இன்னும் விரைவாகவும், எண்ணற்றோர் பயன்பெறும் வகையிலும் செயல்படுத்த தேவையான வழிமுறைகள் குறித்தும் மாவட்ட அளவிலான ஆய்வுக்கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்கூடத்தில் அனைத்து திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், தாய்சேய் நலம், மருத்துவக்காப்பீடு, குடும்பநலம், மகப்பேறு மற்றும் சிசுமரணங்கள், தொற்றா நோய், 108 சேவை, நடமாடும் மருத்துவக்குழு, அம்மா ஆரோக்கியத்திட்டம், மற்றும் மருத்துவத்துறையில் நடைபெற்று வரும் கட்டுமானப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் நமது மாவட்டத்தில் தேசிய நலவாழ்வு குழுமத்தின் மூலம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 2015-16ம் நிதியாண்டில் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.229.46 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புக்கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

மேலும் சத்தியமங்கலம், மதியநல்லூர், விராச்சிலை, புல்வயல், இராசநாயக்கன்பட்டி, திருப்புனவாசல், அத்தானி, செங்காணம் மற்றும் கோட்டைப்பட்டிணம் ஆகிய இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டு ரூ.4.27 கோடி மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடப்பணிகள் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது. புதுக்கோட்டை இராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனையில் ரூ.1.8 கோடி மதிப்பீட்டில் தாய்சேய் நலம் மற்றும் இளம்சிசு பராமரிப்புக்கான கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. காரையூர், நச்சாந்துப்பட்டி, ஆதனக்கோட்டை மற்றும் கோட்டைப்பட்டிணம் ஆகிய இடங்களில் உள்ள வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் மேம்படுத்தப்பட்ட படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டு ரூ.4.1 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடங்கள் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதுடன், திருவரங்குளம் மண்டல சுகாதார பயிற்சி மையத்தில் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிட பணிகளும் நடைபெற்று வருகிறது.

..2..

இலுப்பூர் மற்றும் கறம்பக்குடி அரசு மருத்துவமனைகளில் ரூ.240 இலட்சம் மதிப்பீட்டில் முறையே 54 மற்றும் 30 படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. அம்மா குழந்தைகள் நலப்பெட்டகம் வழங்கும் திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில் 2016-17ம் நிதியாண்டில் இதுவரை 9600 தாய்மார்களுக்கு ரூ.1.2 கோடி மதிப்பீட்டில் அம்மா குழந்தைகள் நலப்பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொதுமக்களின் நலம் காக்க சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நோய் கண்டறியப்பட்டவர்களுக்கு மருத்துவ அறிவுரைகள் மற்றும் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 45790 நபர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

வளரிளம் பெண்கள் மற்றும் பிரசவித்த தாய்மார்கள் தன்சுத்தம் பேணும் வகையில் சானிட்டரி நாப்கின், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதாரநிலையங்கள், அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகிய இடங்களில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இந்நிதியாண்டில் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் சானிட்டரி நாப்கின்கள் வாங்கப்பட்டு 6.2 இலட்சம் நாப்கின்கள் 90000 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்கள் நமது மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே நமது மாவட்டத்தில் சுகாதாரத்துறையின் மூலம் தமிழகஅரசு செயல்படுத்தும் மக்கள் நலத்திட்டங்கள் பொதுமக்களை சென்றடையும் வகையில் அனைத்து மருத்துவ அலுவலர்களும் ஒருங்கிணைந்து சிறப்பாக செயல்பட வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் இயக்குநர்கள் மரு.கே.செங்குட்டுவன் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்), மரு.நாராயணபாபு (மருத்துவக்கல்வி இயக்ககம்), மரு.க.குழந்தைசாமி (பொது சுகாதாரம்), மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பரிமளாதேவி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., இணை இயக்குநர் மரு.சம்ஷாத்பேகம் (பொது சுகாதாரம்), சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, அர்பன் கூட்டுறவு பண்டகசாலை சங்கத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், பொதுசுகாதாரம் துணை இயக்குநர்கள் மரு.பரணீதரன் (புதுக்கோட்டை), மரு.கலைவாணி (அறந்தாங்கி), மருத்துவ அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**